செய்தி வெளியீடு எண்: 189 நாள்:31.05.2021

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமண ஆணை!**

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பணியில் இருக்கும் போது இறந்த ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டு பணிநியமன ஆணைகளை இன்று (31.05.2021) மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் 8 வாரிசுதாரர்களுக்கு வழங்கினார்.

திரு.ஜி. அசோக், த/பெ. (லேட்) கோவிந்தராஜ் காடையாம்பட்டி, சேலம் மாவட்டம், திரு.ஆர்.எம். மோகன்ராஜ் த/பெ. (லேட்) ராஜா, கன்னங்குறிச்சி, சேலம் மாவட்டம், திருமதி.எஸ்.சாந்தி க/பெ. (லேட்) எ.சிவலிங்கம், மூங்கில்பாடி,ஓமலூர், சேலம் மாவட்டம், திரு.பி. குமார், தா/பெ. (லேட்) சின்னம்மாள் கொல்லப்பட்டி, ஓமலூர், சேலம் மாவட்டம், திருமதி.ஜ. ராணி, க/பெ. (லேட்) ஜெ.ஜெயசீலன் தாத்தையங்கார்பட்டி, சேலம் மாவட்டம், திருமதி. கே. இந்துமதி, க/பெ. (லேட்). மேகநாதன் பொன்னம்மாப்பேட்டை, சேலம் மாவட்டம், திரு.ஆர். ரவிச்சந்திரன் த/பெ. (லேட்) ராஜேந்திரன் புதுார் கொல்லப்பட்டி, ஓமலுார், சேலம் மாவட்டம், ஆகிய 7 நபர்களுக்கு தொழலாளர் பணிக்கான ஆணைகளையும் திரு.ஆர்.ராஜாஜெயசீலன், த/பெ. (லேட்) ராஜா வட்டக்காடு, ஓமலுார் சேலம் மாவட்டம் அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பணிக்கான ஆணையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மேற்கண்ட தொழிலாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளருக்கு பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஓர் ஆண்டு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் போது மாதம் ஒன்றுக்கு தொழிலாளர்களுக்கு ரூ.5500/–ம், இளநிலை உதவியாளருக்கு ரூ.7600/–ம் தொகுப்பு ஊதியமாக வழங்கப்படும். ஓராண்டு பயிற்ச்சிக்கு பின்னர் தகுதிகான் பருவம் நிர்ணயிக்கப்பட்டு காலமுறை ஊதியம் (ஊதிய விகிதப்படி) வழங்கப்படும்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவன மேலாண்மை இயக்குனர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி இ.ஆ.ப., மேலாளர் (பணியாளர் மற்றும் நிர்வாகம்) திரு. எஸ். தங்கப்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**